
தூய ஆரோக்கிய அன்னை திருவிழா
நவநாள் – 06
செப்டம்பர் 05, 2023
அருள் நிறைந்தவளே!
நோயாளிகளின் நற்சுகமே!

## அருள் நிறைந்தவளே! நோயாளிகளின் நற்சுகமே

### அன்பில் இணைவோம்

அருட்பணி: ஆண்டவருடைய மீட்பை அறிவியுங்கள்
அவருடைய அரும்பெரும்செயல்களை எடுத்தியம்புங்கள்

Priest: Announce the salvation of the Lord
Proclaim his works among the people

மக்கள்: என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்

People: His mercy is everlasting

அருட்பணி: இறைவார்த்தையால் இவ்வுலகை ஒளிர்வித்த
இறைவனை நாம் வாழ்த்துவோம்.

Priest: Bless the Lord our God
Who sent the Word of life into the World

மக்கள் ஆண்டவர் தம் செயல்களில் நீதியுள்ளவர்
அவருடைய செயல்கள் புனிதமானவை
அணைத்துலகே ஆண்டவரைப் புகழ்வாயாக
உயிருள்ள அணைத்தும் அவரின் திருநாமத்தை வாழ்த்துவதாக

People: Just is the Lord in all His ways And Holy in all His works
Let every creature praise Him and all living beings bless his name

### அன்னையை புகழ்ந்து பாடுவோம்.

உம்மைத்தேடி வந்தேன் சுமை தீருமம்மா
உலகாளும் தாயே அருள்தாருமம்மா-2

முடமான மகனை நடமாட வைத்தாய்
கடல்மீது தவித்த கப்பலைக் காத்தாய்-2
பால்கொண்ட கலசம் பொங்கிடச் செய்தாய்
பொருள்கொண்ட சீமான் உம்பாதம் சேர்த்தாய்-2

கடல்நீரும் கூட உன்கோவில் காண
அலையாக வந்து உன்பாதம் சேரும் - 2
உலகாளும் தாயே உனைப் பாடும் வேளை
நகர்தேடி வந்தேன் நலம் தாரும் அம்மா-2

### மன்றாடுவோமாக

எங்கள் அன்புத் தந்தையே இறைவா!
தூய கன்னி மரியாவின் வேண்டுதல்களாலும் பரிந்துரைகளாலும்
உம் ஊழியராகிய எங்களுக்கு இவ்வுலகில் நல்ல
உடல் உள்ள சுகத்தையும்
துன்பங்களிலிருந்து விடுதலையும்
மறுவாழ்வில் முடிவில்லா மகிழ்ச்சியையும் தந்தருளும்.
உம்மோடும் ...

**முன்மொழி: துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே! அருள் நிறைந்தவளே நீவிர் வாழியவே!**

## திருப்பாடலில் செபிப்போம்

### திருப்பாடல்-102

1 ஆண்டவரே! என் மன்றாட்டைக் கேட்டருளும்!
என் அபயக்குரல் உம்மிடம் வருவதாக!
2 நான் இடுக்கண் உற்ற நாளிலே
உமது முகத்தை மறைக்காதீர்!
உமது செவியை என் பக்கமாகத் திருப்பியருளும்!
நான் மன்றாடும் நாளில் விரைவாய் எனக்குப் பதிலளியும்!
**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே!**
**அருள் நிறைந்தவளே நீவிர் வாழியவே**

3 என் வாழ்நாள்கள் புகையென மறைகின்றன:
என் எலும்புகள் தீச்சூழையென எரிகின்றன.
4 என் இதயம் புல்லைப்போலத் தீய்ந்து கருகுகின்றது:
என் உணவையும் நான் உண்ண மறந்தேன்.
5 என் பொருமூச்சின் பேரொலியால்,
என் எலும்புகள் சதையோடு ஒட்டிக் கொண்டன.
**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே!**
**அருள் நிறைந்தவளே நீவிர் வாழியவே**

6 நான் பாலைநிலப் பறவைபோல் ஆனேன்:
பாழ் நிலத்தின் ஆந்தைபோல் ஆனேன்.
7 நான் தூக்கமின்றித் தவிக்கின்றேன்:
கூரைமேல் தனிமையாய் இருக்கும் பறவைபோல் ஆனேன்.
8 என் எதிரிகள் நாள்முழுதும் என்னை இழித்துரைக்கின்றனர்:
என்னை எள்ளி நகையாடுவோர்
என் பெயரைச் சொல்லிப் பிறரைச் சபிக்கின்றனர்.
**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே!**
**அருள் நிறைந்தவளே நீவிர் வாழியவே**

9 சாம்பலை நான் உணவாகக் கொள்கின்றேன்:
என் மதுக்கலவையோடு கண்ணீரைக் கலக்கின்றேன்.
10 ஏனெனில், உமது சினத்திற்கும் சீற்றத்திற்கும் உள்ளானேன்:
நீர் என்னைத் தூக்கி எறிந்துவிட்டீர்.
11 மாலை நிழலைப்போன்றது எனது வாழ்நாள்:
புல்லென நான் உலர்ந்து போகின்றேன்.
12 ஆண்டவரே! நீர் என்றென்றும் கொலுவீற்றிருக்கின்றீர்:
உமது புகழ் தலைமுறைதோறும் நிலைத்திருக்கும்.
**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே!**
**அருள் நிறைந்தவளே நீவிர் வாழியவே**

13 நீர் எழுந்தருளி, சீயோனுக்கு இரக்கம் காட்டும்:
இதோ! குறித்த காலம் வந்துவிட்டது.

[14]அதன் கற்கள்மீது உம் ஊழியர் பற்றுக்கொண்டுள்ளனர்:
அதன் அழிவை நினைத்துப் பரிதவிக்கின்றனர்.
[15]வேற்றினத்தார் ஆண்டவரின் பெயருக்கு அஞ்சுவர்:
பூவுலகின் மன்னர் யாவரும் அவரது மாட்சியைக் கண்டு மருள்வர்.
[16]ஏனெனில், ஆண்டவர் சீயோனைக் கட்டியெழுப்புவார்:
அங்கு அவர் தம் மாட்சியுடன் திகழ்வார்.

**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே!**
**அருள் நிறைந்தவளே நீவிர் வாழியவே**

[17]திக்கற்றவர்களின் வேண்டுதலுக்க அவர் செவிகொடுப்பார்:
அவர்களின் மன்றாட்டை அவமதியார்.
[18]இனி வரவிருக்கும் தலைமுறைக்கென இது எழுதி வைக்கப்படட்டும்:
படைக்கப்படவிருக்கும் மக்கள் ஆண்டவரைப் புகழட்டும்.
[19]ஆண்டவர் தம் மேலுலுகத் திருத்தலத்தினின்று கீழே நோக்கினார்:
அவர் விண்ணுலகினின்று வையகத்தைக் கண்ணோக்கினார்.

**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே!**
**அருள் நிறைந்தவளே நீவிர் வாழியவே**

[20]அவர் சிறைப்பட்டோரின் புலம்பலுக்குச் செவிசாய்ப்பார்:
சாவுக்கெனக் குறிக்கப்பட்டவர்களை விடுவிப்பார்.
[21]சீயோனில் ஆண்டவரின் பெயர் போற்றப்படும்:
எருசலேமில் அவர்தம் புகழ் அறிவிக்கப்படும்.

**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே!**
**அருள் நிறைந்தவளே நீவிர் வாழியவே**

[22]அப்போது, மக்களினங்களும் அரசுகளும்
ஒன்றுதிரண்டு ஆண்டவரை வழிபடுவர்.
[23]என் வாழ்க்கைப் பாதையின் நடுவில்
ஆண்டவர் என் வலிமையைக் குன்றச் செய்தார்:
அவர் என் ஆயுளைக் குறுக்கிவிட்டார்.

**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே!**
**அருள் நிறைந்தவளே நீவிர் வாழியவே**

[24]நான் உரைத்தது, ' என் இறைவா!
என் வாழ்நாளின் இடையில் என்னை எடுத்துக் கொள்ளாதேயும்:
உமது காலம் தலைமுறை தலைமுறையாய் உள்ளதன்றோ?
[25]முற்காலத்தில் நீர் பூவுலகுக்கு அடித்தளமிட்டீர்:
விண்ணுலகம் உமது கைவினைப் பொருள் அன்றோ!
[26]அவையோ அழிந்துவிடும்: நீரோ நிலைத்திருப்பீர்:
அவையெல்லாம் ஆடைபோல் பழமையாகும்:
அவற்றை நீர் உடையென மாற்றுகின்றீர்: அவையும் மறைந்துபோம்.

**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே!**
**அருள் நிறைந்தவளே நீவிர் வாழியவே**

[27]நீரோ மாறாதவர்! உமது காலமும் முடிவற்றது.
[28]உம் அடியாரின் பிள்ளைகள் பாதுகாப்புடன் வாழ்வர்:
அவர்களின் வழிமரபினர் உமது திருமுன் நிலைத்திருப்பர்!

**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே!**
**அருள் நிறைந்தவளே நீவிர் வாழியவே**

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக
தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக—ஆமென்.

**முன்மொழி: துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே! அருள் நிறைந்தவளே நீவிர் வாழியவே**

# இறைவார்த்தைக்கு செவிமடுப்போம்

**புனித லூக்கா எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம்**

1,39-56

[39]அதன்பின் மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து
சென்றார். [40]அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார்.
[41]மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை
மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும்
ஆட்கொள்ளப்பட்டார். [42]அப்போது அவர் உரத்த குரலில், ‘பெண்களுக்குள் நீர் ஆசி
பெற்றவர்: உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே! [43]ஆண்டவரின் தாய்
என்னிடம் வர நான் யார்? [44]உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என்
வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று. [45]ஆண்டவர் உமக்குச்
சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்’ என்றார். [46]அதைக்
கேட்ட மரியா பின்வருமாறு கூறினார்: [47]ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப்
பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேரு-
வகை கொள்கின்றது. [48]ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக்
கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர்
என்பர். [49]ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள்
செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர். [50]அவருக்கு அஞ்சி நடப்போருக்குத்
தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார். [51]அவர் தம் தோள்
வலிமையைக் காட்டியுள்ளார்: உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து
வருகிறார். [52]வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார்: தாழ்நிலையில்
இருப்போரை உயர்த்துகிறார். [53]பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார்: செல்வரை
வெறுங்கையராய் அனுப்பிவிடுவார். [54]மூதாதையருக்கு உரைத்தபடியே அவர்
ஆபிரகாமையும் அவர்தம் வழி மரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில்
கொண்டுள்ளார். [55]தம் ஊழியராகிய இஸ்ரயேலுக்குத் துணையாக இருந்து வருகிறார்.
[56]மரியா ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு தங்கியிருந்த பின்பு தம் வீடு
திரும்பினார்.

**இது கிறிஸ்துவின் வாழ்வு தரும் நற்செய்தி**
**கிறிஸ்துவே உமக்குப் புகழ்..**

## A Reading from the Holy Gospel according to St. Luke: 1: 39-56

[39] In those days Mary set out and went with haste to a Judean town in the hill coun-
try, [40] where she entered the house of Zechariah and greeted Elizabeth. [41] When Eliz-
abeth heard Mary’s greeting, the child leaped in her womb. And Elizabeth was filled

with the Holy Spirit 42 and exclaimed with a loud cry, "Blessed are you among women, and blessed is the fruit of your womb. 43 And why has this happened to me, that the mother of my Lord comes to me? 44 For as soon as I heard the sound of your greeting, the child in my womb leaped for joy. 45 And blessed is she who believed that there would be[a] a fulfillment of what was spoken to her by the Lord."

46 And Mary[b] said, "My soul magnifies the Lord, 47 and my spirit rejoices in God my Savior, 48 for he has looked with favor on the lowly state of his servant. Surely from now on all generations will call me blessed, 49 for the Mighty One has done great things for me, and holy is his name;50 indeed, his mercy is for those who fear him from generation to generation.51 He has shown strength with his arm; he has scattered the proud in the imagination of their hearts. 52 He has brought down the powerful from their thrones and lifted up the lowly; 53 he has filled the hungry with good things and sent the rich away empty. 54 He has come to the aid of his child Israel, in remembrance of his mercy, 55 according to the promise he made to our ancestors, to Abraham and to his descendants forever." 56 And Mary remained with her about three months and then returned to her home.

**இறை வார்த்தையை உள்ளத்தில் இருத்தி சிந்திப்போம்...** (Reflection)

## இறைமக்களின் மன்றாட்டு

**அருட்பணி: ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பியதால் பேறுபெற்ற தாயே! எங்கள் ஆரோக்கிய அன்னையே! உம்மைப்போல இறைதிட்டத்துக்கு நாங்களும் ஒத்துழைக்க உம்மிடம் எங்கள் வேண்டுதல்களை சமர்ப்பிக்கின்றோம்.**

1. அன்னையாம் திருச்சபைக்காக மன்றாடுவோம்: தாய் திருச்சபையை வழிநடத்தும் நமது திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள் குருக்கள் மற்றும் இறைமக்கள் நமது அன்னை மரியாவைப் போல ஆவியின் வரங்களால் நிரப்பட்டு எல்லோரையும் மகிழ்விக்கும் நற்செய்தியின் கருவிகளாகத் திகழ்ந்திட ...
**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே! அருள் நிறைந்தவளே அடியவர் எமக்காய் மன்றாடும் தாயே!**

2. நமது தளத்திருச்சபைக்காக மன்றாடுவோம். நமது தலைமை ஆயர் மற்றும் இனையாயர்கள் நமது உயர் மறைமாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் இறைவார்த்தையின் ஒளி மகிழ்சியிலும் மனநிறைவிலும் நாளுக்கு நாள் வாழ்ந்திட வளர்ந்திட...
**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே! அருள் நிறைந்தவளே அடியவர் எமக்காய் மன்றாடும் தாயே!**

3. அமெரிக்கா வாழ் இந்தியர்களுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காக மன்றாடுவோம். அன்பிலும் மகிழ்ச்சியிலும் ஒன்றுபட்டு வாழ்ந்து உலகிற்கு ஒளியாய்த் திகழ்ந்திட...
**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே! அருள் நிறைந்தவளே அடியவர் எமக்காய் மன்றாடும் தாயே!**

4. புனித ஆரோக்கிய அன்னையின் பத்தர்களுக்காக மன்றாடுவோம்: அன்னையைப் போல பிறரன்பிலும் இறையன்பிலும் நாளுக்கு நாள் வாழ்ந்து வளர்ந்திடவும் நற்செய்திக்குச் சான்றுபகர்ந்திடவும் அருள்வேண்டி..
**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே!**
**அருள் நிறைந்தவளே அடியவர் எமக்காய் மன்றாடும் தாயே!**

5. உலக அமைதிக்காகவும், குறிப்பாக இந்தியாவில் குறிப்பாக மனிப்பூரில் அமைதி திரும்பவும், இயற்கை அழிவினால் பாதிக்கப்பட்ட மக்கள் மறுவாழ்வு பெறவும்...
**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே!**
**அருள் நிறைந்தவளே அடியவர் எமக்காய் மன்றாடும் தாயே!**

6. நமது குடும்பங்களை அன்னையிடம் ஒப்படைப்போம். ஒவ்வொரு குடும்பங்களின் தேவைகள். அன்பு, அமைதி, குடும்ப ஒற்றுமை, இன்னும் பல்வேறு தேவைகளையும் குறிப்பாக விசா தேவைகள் அனைத்தையும் அன்னையிடம் ஒப்படைப்போம், இவற்றிலிருந்து மீண்டுடெழுந்து நாங்கள் அன்றாட ஆன்மீக வாழ்வில் வளரவும், எங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வில் நம்பிக்கை ஒளியில் வெற்றிநடைபோடவும்…
**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே!**
**அருள் நிறைந்தவளே அடியவர் எமக்காய் மன்றாடும் தாயே!**

6. நமது தனிப்பட்ட தேவைகளுக்காக ….
**துன்பப்படுவோரின் தேற்றரவே! வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே!**
**அருள் நிறைந்தவளே அடியவர் எமக்காய் மன்றாடும் தாயே!**

## புனித ஆரோக்கிய அன்னை நவநாள் செபம்

மகா பரிசுத்த கன்னிகையே! இயேசுவின் தாயாராயிருக்குமாறு
பரிசுத்த மூவொரு கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட தூய கன்னி மரியே!
கடவுளுடைய திருப்புதல்வர் உமது திருஉதரத்தில்
மனிதராக அவதரித்தபோதும் ஒன்பது மாதமளவாக
அவரை உமது மாசணுகாத கருவில் தாங்கியபோதும்
நீர் அடைந்த பேரின்பத்தை உமது ஊழியர்களாகிய நாங்கள்
நினைவுகூர அருள்கூர்ந்தமைக்கு உமக்கு நன்றிகூருகின்றோம்.
எமது அன்பினாலும் தூய வாழ்வினாலும்
நீர் அடைந்த பேரின்பத்தை நாங்களும் அடைய
எங்களுக்காக மன்றாடும் தாயே!
துன்பப்படுவோரின் தாயே இரக்கமிக்க அன்னையே!
நீர் அனுபவித்த பேரின்பத்தைக் கொண்டாடுகின்றவர்களுக்கு
நீர் வாக்களித்துள்ள விசேச உதவியையும் பாதுகாப்பையும்
எங்களுக்கு இவ்வேளையில் பெற்றுத்தந்தருளும்.
கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற உம் திருமகன் இயேசுகிறிஸ்துவின்
வல்லமைமிக்க வார்த்தையில் நம்பிக்கைகொண்டு
உமது வல்லமைமிக்க மன்றாட்டுகளில் நம்பிக்கைகொண்டு
இந்த நவநாட்களில் நாங்கள் செய்யும் விண்ணப்பங்களை
கடவுளுடைய திருவுளத்திற்கு மாறாயிருந்தால்
எமக்கு எவ்வரம் மிகவும் தேவையோ அவற்றை பெற்றுத்தந்தருளும்.

(இங்கு மன்றாட்டுக்களை நினைவிற்கொள்ளவும்)

இறைவனின் தாயே! இப்பொழுது உமக்கு வணக்கமாக
நாங்கள் செய்யும் இந்த நவநாளை உம்மில்கொண்டிருக்கும்
ஆழ்ந்த நம்பிக்கையின்பொருட்டு செய்கிறோம்.
இயேசு மனிதராக அவதரித்தபோது
உமது திருவுளம் அடைந்த தெய்வீக மகிழ்ச்சியை
அதற்கு வணக்கமாக நாங்கள் செய்யும் இந்நவநாள் பக்தி முயற்சியையும்
இப்பொழுது நாங்கள் சொல்லப்போகும்
அருள் நிறைந்த செபத்தையும் அன்போடு ஏற்றுக்கொள்ளும் தாயே!

(௯ முறை அருள் நிறைந்த செபம்)

நீர் அணிந்திருக்கும் மணிமுடியில்
எம் செபங்கள் அத்தனையும் விண்மீண்களென துலங்குமென
ஆழ்ந்த நம்பிக்கைகொள்கின்றென்.
வருந்துவோருக்கு ஆறுதலே!
எம் வேளைநகர் ஆரோக்கியத் தாயே!
நாங்கள் உம்மிடம் மன்றாடும் விண்ணப்பங்கள் நிறைவேறுமாறு
உமக்கு வணக்கமாக இதுவரை புனிதர்களால் செய்யப்பட்ட
எல்லா அரும்பெரும் நிகழ்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.
உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமான
இயேசு கிறிஸ்துவின் திருஇருதயத்தில் பொங்கி வழியும் பேரன்பையும்
அதுபோன்ற உமது அன்பையும் நினைவிற்கொண்டு
உமது அடியோர்களாகிய எங்களது செபத்தை ஏற்று
எம் மன்றாட்டுகளை அடைந்து தந்தருளும் அம்மா. ஆமென்.

## அருள் நிறைந்த நம் ஆரோக்கிய அன்னைக்கு அஞ்சலி

ஆரோக்கிய மாதாவே-உமது
புகழ்பாடித் துதித்திடுவோம்
எந்நாளும் பாடித்துதித்திடுவோம்.

அலைகள் மோதிடும் கடற்கரை தன்னில்
வசித்திட ஆசை வைத்தாயே
பலவகை கலைகளும் பாரினில் துலங்கிட
அணைவர்க்கும் துணை புரிந்தாயே-2

தேன்கமழும் சோலை சூழ்ந்து விளங்கும்
வேளாங்கண்ணியில் அமர்ந்தாயே
வானகமும் இந்த வையகமும்
செழித்தோங்கிட அருள் புரிந்தாயே-2

### மன்றாடுவோமாக

பேரிரக்கமுள்ள இறைவா!
உம் திரு மகனின் துன்பத்தில் பங்கேற்கும்
பேற்றினை தூய கன்னி மரியாளுக்கு தந்து,
அவளின் பாதுகாவலை வேண்டிநிற்போர்க்கும்

அவள் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாகவும்
எங்கள் துன்பவேளையில் துனையாகவும்,
நோயுற்றோரின் நற்சுகமாகவும்
புது வாழ்வின் வாக்குறதியாகவும்
திகழ்ந்திட திருவுளமானீர்
அவளை நோக்கி மன்றாடும் அனைவருக்கும்
உமது திட்டத்தை முழமையாக ஏற்றுக் கொண்ட
முன்மாதிரியாக திகழ்கின்றாள். நாங்களும் அவளின்
முன்மாதிரியைப் பின்பற்றி உடலிலும் உள்ளத்திலும்
நலம் பெற்று உமது அன்பின் அருளடையாளமாகத் திகழ்வோமாக
எங்கள்

## இறையாசீர்

**துன்பப்படுவோரின் தேற்றரவே!**
**வியாதியுற்றோருக்கு ஆரோக்கியமே!**
**அருள் நிறைந்தவளே அடியவர் எமக்காய் மன்றாடும் தாயே!**



**Velankanni Community of Southern California**
**Divine Saviour Catholic Church**
**610 Cypress Ave, Los Angeles CA 90065**